செ.வெ.எண்: 19 நாள்: 12.01.2017

ந.க.ஆர்3/649/2017.
நாள் .12.01.2017.

உதவி ஆணையர்(கலால்) அலுவலகம்,
கடலூர்.

# மாவட்ட ஆட்சியரின் பத்திரிக்கைச் செய்தி

2003 – ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லரை விற்பனை) விதி எண் 12-ன்படி 15.01.2017 – அன்று (ஞாயிற்று கிழமை) திருவள்ளுவர் தினம் மற்றும் 26.01.2017 (வியாழக்கிழமை) அன்று குடியரசு தினம் என்பதால் மேற்படி 15.01.2017 மற்றும் 26.01.2017 ஆகிய இரண்டு தினங்களில் மாவட்டத்தில் உள்ள எல்லா மதுபானக் கடைகள் மற்றும், மதுபானக் கூடங்களில் மதுபானங்கள் ஏதும் விற்கப்படாமல் மூடியிருக்கவேண்டும். மேலும், டாஸ்மாக் மூலம் நடத்தப்படும் சில்லரை மதுபானக் கடைகளின் மேற்பார்வையாளர்கள், எப்.எல்.2 ரெக்ரியேஷன் கிளப், எப்.எல்.3 ஹோட்டல் பார் ஆகிய உரிமதாரர்கள்15.01.2017, 26.01.2017 ஆகிய இரண்டு தினங்களில் இம்மாவட்டத்தில் எந்த ஒரு இடத்திலும் மது விற்பனை நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்துகொள்ளவேண்டும். இதனை மீறி எவரேனும் மதுபான கடைகளை திறந்து மதுபானங்கள் விற்றாலோ அல்லது மது அருந்தும் கூடங்களை திறந்து வைத்திருந்தாலோ சம்பந்தப்பட்ட டாஸ்மாக் கடை மேற்பார்வையாளர், டாஸ்மாக் பார் உரிமையாளர்கள் மற்றும் ஹோட்டல் பார் உரிமையாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்)/ – த.பொ.ராஜேஷ்.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர்.

12/1/17

–/உ.ந.உ.ப/–

மாவட்ட ஆட்சியருக்காக,
கடலூர்.

12.1.2017

வெளியீடு:- செ. ம.தொ. அ. கடலூர்